**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 114/2020 |
| Name | : Saravanan |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**11.06.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் ருத்திரபாளையத்தில் வசிக்கிறேன். ஓட்டுநராக வேலை செய்கிறேன். 27.11.2015 ம் தேதி காலை சுமார் 09.00-09.15 மணி அளவில் நானும், எனது நண்பர் மீனாட்சி சுந்தரமும் இருசக்கர வாகனத்தில் கொமரலிங்கத்தில் இருந்து மேற்கே ஆனைமலை ரோட்டில் தளி போவதற்காக சென்று கொண்டிருந்தோம். எங்களுக்கு முன்னால் எனது மச்சினர்கள் ராமன், லட்சுமணன், திருமூர்த்தி ஆகிய மூவரும் இருசக்கர வாகனத்தில் தேங்காய் பறிப்பதற்காக சென்று கொண்டிருந்தார்கள். எலையமுத்தூர் மேட்டு காடு அருகில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த வாத்தியார் அவர் பெயர் ஜான் பிரிட்டோ என்று நினைக்கிறேன் அவர் ஓட்டி பின்னார் ஒருவர் அமர்ந்திருக்க அவர் பெயர் பாபு என்று நினைக்கிறேன் சரியாக ஞாபகம் இல்லை அவரது இருசக்கர வாகனத்தில் இண்டிகேட்டர் எதுவும் போடாமல் மூவரும் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டார் அதில் மூவரும் கீழே விழுந்துவிட்டார்கள் அதில் ராமன்

என்பவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. லட்சுமணன் மற்றும் திருமூர்த்திக்கு லேசான சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. போக்கு வண்டி மூலமாக மூவரையும் உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். மூவரையும் கோவை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் கோவைக்கு சென்று பார்த்தேன். மதியம் 12.30 மணி அளவில் ராமன் இறந்துவிட்டார். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மருத்துவமனையில் போலீசார் பிரேத விசாரணை செய்த போது உடனிருந்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நாங்கள் வழக்கமாக காலையில் எத்தனை மணிக்கு வேலைக்கு செல்வோம் என்றால் சுமார் 07.00 மணி அளவில் செல்வோம். மீனாட்சி சுந்தரம் எனது நண்பர். விபத்தில் இறந்த ராமர் எனது உறவினர். நாங்கள் பின்னால் சென்றதாக சொல்லும் வாகனத்தின் பதிவு எண்ணை போலீஸில் சொன்னேனா என்றால் ஞாபகம் இல்லை. ராமன், லட்சுமணன் மற்றும் திருமூர்த்தி தேங்காய் போடும் வேலை செய்து வந்தார்கள் என்றால் சரிதான். தேங்காய் போடுவது சல்லை மூலமாக போடுவார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் மூவரும் ஒரே இருசக்கர வாகனத்தில் சென்றார்கள் என்றால் சரிதான்.

(2) ரோட்டின் மையத்திற்கு தென்புறம் விபத்து நடந்தது. ராமரின் இருசக்கர வாகனம் எதிரி வாகனத்தின் எந்த பகுதியில் மோதியது என்றால் அந்த சமயத்தில் சரியாக கவனிக்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு 5 அடி மேற்கே வேகத்தடை இருந்தது என்றால் அந்த சமயத்தில் வேகத்தடை இல்லை. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகாரை யார் எழுதியது என்றால் போலீஸ்காரர் எழுதினார். புகாரில் எதிரி இண்டிகேட்டர் போடாமல் திருப்பியதாக சொல்லவில்லை என்றால் சரியாக ஞாபகம் இல்லை.

(3) அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவில்லை போக்கு வண்டி மூலம் அனுப்பி வைத்தேன். அதன் பின்பு புகார் கொடுத்தேனா என்றால் கோவை சென்று வந்த

பின்பு சாயங்காலம் புகார் கொடுத்தேன். அதன் பின்பு போலீசார் என்னை பார்க்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக இருசக்கர வாகனத்தில் இருவர் மட்டுமே செல்ல வேண்டும் என்றால் சரிதான். மூன்று பேரும் செல்லும் போது நிலையாக செல்லும் வாய்ப்பு குறைவு என்றால் சரிதான். அந்த சமயத்தில் ராமர் தலை கவசம் அணியவில்லை என்றால் சரிதான். எதிரி அவரது வாகனத்தில் சரியான திசையில் மிதமான வேகத்தில் வந்தார் என்றும் ராமன், லட்சுமணன், திருமூர்த்தி ஆகியோர் மூன்று பேர் ஒரே இருசக்கர வாகனத்தில் தேங்காய் உரிக்கும் சல்லையை தோளில் வைத்து வந்தார்கள் என்றும் அவர்களாகவே நிலை தடுமாறி கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவர்களின் கவனக்குறைவினால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு ராமன் தான் முழுக் காரணம் என்றும், ராமன் எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் சென்று பார்த்த போது விபத்து ஏற்பட்டு கீழே விழுந்து கிடந்தார்கள் வண்டியில் ஏற்றி அனுப்பி வைத்தேன். நான் செல்லும் போது விபத்து ஏற்பட்டு கீழே விழுந்து கிடந்தார்கள் விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். இறந்து போன ராமர் உறவினர் என்றும் நஷ்ட ஈடு பெற வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடத்திற்கும் எலைமுத்துார் பிரிவிற்கும் 100 மீட்டர் துாரம் இருக்கும் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.06.11 18:31:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 114/2020 |
| Name | : Meenatchi Sundaram |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.06.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் கொமரலிங்கத்தில் வசிக்கிறேன். தற்போது பெயிண்டராக வேலை செய்கிறேன். நான் முன்பு தேங்காய் வேலைக்கு சென்று வந்து கொண்டிருந்தேன். நானும் சரவணனும் 21.11.2015 ம் தேதி இருசக்கர வாகனத்தில் ஆனைமலை ரோட்டில் தளிக்கு சென்று கொண்டிருந்தோம் அப்போது எலைமுத்தூர் மேட்டுகாடு நால் ரோட்டில் திருமூர்த்தி, ராமர் மற்றும் லட்சுமணன் இருசக்கர வாகனத்தில் சென்று விபத்து ஏற்பட்டு கீழே கிடந்தார்கள் நாங்கள் பின்னால் சென்றோம். நாங்கள் ஆம்புலன்ஸ் மூலமாக உடுமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். இது சம்மந்தமாக சரவணன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். ராமர் மறு நாள் இறந்துவிட்டார். திருமூர்த்தி மற்றும் லட்சுமணனுக்கு காயம் ஏற்பட்டது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) அ.சா.1 எனது நண்பர். நானும், சரவணனும் பின்னால் சென்ற வண்டியின் பதிவு

எண்ணை போலீஸில் சொன்னேனா என்றால் இல்லை. திருமூர்த்தி, ராமர் மற்றும் லட்சுமணன் தேங்காய் பறிக்கும் வேலை செய்து வந்தார்கள். பொதுவாக தேங்காய் சல்லை பயன்படுத்துவார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த அன்று மூவரும் ஒரே இருசக்கர வாகனத்தில் சென்றார்கள் என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். யார், யார் மீது மோதினார்கள் என்றால் சரியல்ல. இறந்து போன ராமர் எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.06.11 18:31:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்